ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ புரட்டாசி௴ பகுதி கூ.
Vol 8. September & October 1931. No. 9.

முதலியாண்டான் பத்து வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரத்திலிருக்குமிருப்பு, பிராட்டி ராவண * பவனத்திலிருந்து காட்டியருளினார். எங்ஙனேயென்னில்;—பிராட்டி இளையபெருமாள்விஷயமாகப் ‡ பேசினவார்த்தையாலே பெருமாளைப் பிரிந்துபோனாப்போலே, இந்தச் சேதனனுக்குத் † ததீயவிஷயத்திற்பண்ணும் அபசாரம், ஈசுவரன் திருவடி

* பவனம்—வீடு.

‡ பேசினவார்த்தையாவது— கடிந்து பேசிய மொழியாம். அது வருமாறு.—இராமபிரான் மாரீசனாகிய மாயமான் பின்தொடர்ந்து சென்றபோது அந்த மான் இராமபாணத்துக்கு இலக்காகி உயிர் விட்ட சமயம் லக்ஷ்மணா! என்ற கூக்குரலிட்டது. அவ்வொலியினைக்கேட்ட பிராட்டியார் இராமபிரானுக்கோர் இடுக்கண் விளைந்ததாகக்கருதி இளையபெருமாளை நோக்கி, "குற்றம்வீந்த குணத்தினெங்கோமகன், மற்றை வாளரக்கன்புரி மாயையால், இற்றுவீழ்ந்தனனென்னவுமென்னயல், நிற்றியோவிளையோயொரு நீயென்றான்" என்றும், "ஒரு பகல் பழகினாருயிரை யீவரால், பெருமகனுலைவுறப் பெற்றிகேட்டு நீ, வெருவலைநின்றனை வேறென்யானினி, எரியிடைவீழ்ந்துயிரிறப்பலீண்டென" என்றுங் கூறிய சொற்களாம்.

† ததீயவிஷயத்திற்பண்ணும் அபசாரம்—எம்பெருமானுடைய அடியார்கள் விஷயத்திற் செய்யுங் குற்றம்.

களில் நினைவை லபியாமற்பண்ணும். (2) பிராட்டிக்கு அசோக வனம்போலே இவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமான தேகம். (3) பிராட்டிக்குக் கந்தமூலபலங்கள் ஸமர்ப்பிக்கிற ராக்ஷஸஸ்திரீகளுடைய ஸஹவாஸம்போலே, இவனுக்குப் புத்திர மித்திர ஸஹவாஸம். (4) பிராட்டிக்கு மாரீசதரிசனம்போலே இவனுக்கு விஷயப்ராவண்யம். (5) பிராட்டி திருவடியைக் கண்டாப்போலே இவனுக்கு ஆசார்ய ஸமாச்ரயணம் பண்ணுகை (6) பிராட்டிக்குத் திருவடி சொன்ன ராமகுணங்கள்போலே இவனுக்கு ஸ்ரீராமாயண பாரத பாகவத புராணரத்னாதிகளையும், ஆழ்வாராசார்யர்களுடைய திவ்ய ப்ரபந்த ரஹஸ்யங்களையுங் கேட்கை (7) பிராட்டிக்கு

---

(2) பிராட்டியார் அசோகவனத்திலிருந்தபொழுது மனம் பொருது 'இவ்விடத்தை எப்பொழுது விட்டகன்று இராமபிரான் திருவடியைக் கிட்டுவோம்' என்று அவ்விடத்திலிருப்பில் வெறுப்புற்றிருந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவன் அஜ்ஞானத்தை விளக்கின்ற தேகத்தைவிட்டு எம்பெருமான் திருவடியை யடைதற்கு ஆவலுடையவனாய்த் தேகஸம்பந்தத்தில் வெறுப்புற்றிருத்தல் வேண்டும்.

(3) பிராட்டியாருக்கு ராக்ஷஸ ஸ்திரீகளுடைய உறவு அசஹ்யமாய் (மனம் பொருமல்) இருந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்குப் புத்திரர் முதலானோர்களின் ஸஹவாஸத்தில் வெறுப்பிருத்தல் வேண்டும்.

(4) பிராட்டிக்கு மாயாமானாகிய மாரீசதரிசனம் துக்கத்தை விளைவித்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு விஷயப்ராவண்யம் துன்பத்தை விளைவிக்கும், [விஷயப்ராவண்யம்-புலன்களில் செல்லும் ஆசை.]

(5) பிராட்டியாருக்கு அநுமானைக்கண்டபோது உகப்புண்டானது போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யனை யடைவதில் மகிழ்ச்சியுண்டாக வேண்டும்.

(6) பிராட்டியார் அநுமான் சொன்ன ராமகுணவிசேஷங்களைக் கேட்டு மகிழ்வுற்றதுபோல, ஸ்ரீவைஷ்ணவன் ஸ்ரீராமாயண முதலிய இதிஹாஸங்களையும், ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையுங்கேட்டு மகிழ்வெய்தக்கடவன்.

(7) அநுமான் திருவாழியை அடையாளமாகக் கொடுத்துத் தன் வரவினைத் தெரிவித்தவுடன் பிராட்டி சம்சயத்தினின்றும் நீங்கப்பெற்று 'இனி நமக்கு ராமப்ராப்தி ஸித்தம்' என்று நிர்மாணித்திருந்ததுபோல, ஸ்ரீவைஷ்

ஸ்ரீ முத்திரையைக்கொடுத்து வரவு சொன்னாப்போலே இவனுக்கு ஆசார்யனருளிச்செய்த குருபரம்பரை. (8) பிராட்டி, திருவடிக்குச் சிரோரத்னம் கொடுத்தாப்போலே இவனுக்கு ஆசார்யன் சொன்ன திருமந்த்ரம். (9) பிராட்டிக்கு ஸ்ரீவிபீஷணாழ்வான் திருமகளார் பேச்சுத்துணையானாப்போலே இவனுக்கும் பாகவத ஸஹவாஸமும் அவர்கள் திவ்ய ஸூக்தியும். (10) பிராட்டிக்கு விரோதிகளான ராவணகும்பகர்ணாதிகளைச் சங்கரித்து, பெருமாள் சீதாபிராட்டியாரைக் கூட்டிக்கொண்டு திருவயோத்திக்கு எழுந்தருளினாப் போலே இவனுக்கு விரோதியான தேவதாந்த்ர மந்த்ராந்த்ரங்களையும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் சங்கரித்து உடையவன் இச் சேதநனைத் திருத்திப்பணிகொண்டு ததனந்தரம் நித்யஸூரிகளோடே ஒரு கோர்வையாகத் தன்னை நித்யாநுபவம் பண்ணி வைப்பான்.

னவனுக்கு ஆசார்யன் ஸமாச்ரயணஞ்செய்து குருபரம்பரையை உபதேசித்தவுடன் இவனுக்குச் சம்சயமகலப் பெற்று பகவத் ப்ராப்தி சித்தமென்ற உணர்ச்சியுண்டாகும். இங்குக் குருபரம்பரை என்றது ஸ்வாசார்யன் முதலாக ஸ்ரீதரன் இறுதியாக அநுஸந்திக்கப்படும் வாக்ய குருபரம்பரையை.

(8) பிராட்டி கொடுத்த சூளாமணியானது திருவடிக்கு உஜ்ஜீவன ஹேதுவாயிருந்ததுபோல ஆசார்யன் உபதேசித்த திருமந்திரமானது ஸ்ரீவைஷ்ணவனுக்கு உஜ்ஜீவன ஹேதுவாயிருக்கும். திருமந்திரத்தின் அர்த்தாநுஸந்தானமே உண்மையறிவைப் பிறப்பிக்குமாதலால் இது உஜ்ஜீவன ஹேதுவாயிருக்குமென்பதில் தட்டில்லை.

(9) ஸ்ரீ விபீஷணாழ்வான் திருமகளாகிய திரிசடை அப்பொழுதுக்கப்பொழுது கூறிய நலனுரைகள் பிராட்டியாருக்குப் பெரிதும் துணையாயிருந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்குப் பாகவதர்களின் உறவும், அவர்கள் இன்னுரையும் பெரிதும் துணையாயிருக்கும்.

(10) பிராட்டிக்கு விரோதிகளாகிய இராக்ஷஸர்களை ஸ்ரீராமபிரான் கொன்று பிராட்டியைத் திருவயோத்திக் கழைத்துச்சென்றது போல, ஸ்ரீவைஷ்ணவனுக்கு விரோதிகளாகிய அன்னிய தெய்வங்களைப் பஜித்தல் முதலியவைகளையும், தேக சம்பந்தத்தையுமொழித்துப் பரமபதத்திற்கழைத்துச்சென்று நித்யாநுபவஞ் செய்யும்படி செய்தருள்வான்.

ஸ்ரீ:

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து.

(பரிமேலழகருரை.)

கடவுள் வாழ்த்தாவது— கவிதான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளையெனா அறிக; என்னை? சத்துவ

கவிதான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல் என்றது கவிஞன் தான் தொன்றுதொட்டு வழிபட்டு வருகிற கடவுளையாவது அல்லது எடுத்துக்கொண்ட பொருட்குயாதானுமோர் சம்பந்தமுடைய கடவுளையாவது வாழ்த்துதலாம் என்றவாறு. இதனால் கவிஞன் தானெடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு நூலாரம்பத்தில் கடவுள் வணக்கஞ்செய்தல் பழமையான முறையென்றும், அவ்வணக்கம் இருவகைப்படுமென்றுங் கூறினார். இதனை மங்கலமென்ப, மங்கலம் நூன்முடிபிற்குக் காரணமாதலைத் தர்க்க நூல்களிற் காண்க. அவற்றுள் என்றது அவ்விருவகை வாழ்த்துக்களுள் என்றவாறு. இவ்வாழ்த்து என்றது இந்நூலில் திருவள்ளுவரால் கூறப்பட்ட கடவுள் வாழ்த்து என்றவாறு. ஏற்புடைக்கடவுளையென அறிக என்றது எடுத்துக்கொண்ட பொருளோடு சம்பந்தமுடைய கடவுளையென அறிக என்றவாறு. என்னை? என்றது எடுத்துக்கொண்ட பொருட்கு ஈண்டுச் சம்பந்தம் யாதெனின் என்றவாறு. சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு என்றது சத்துவ ரஜஸ் தமமென்னும் முக்குணங்காரணமாய் விரும்பப்படுகின்ற அறம் பொருள் இன்பமென்னும் மூன்று புருஷார்த்தங்கட்கும் என்றவாறு.

· சத்துவகுணம் அறத்தின் விருப்பத்திற்குக் காரணமாயும், ரஜோகுணம் பொருளின் விருப்பத்திற்குக் காரணமாயும், தமோ

முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவ ராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான்.

குணம் இன்பவிருப்பத்திற்குக் காரணமாயுமிருக்குமென்று முறை யாகக்கொள்க. மேலும், குணபேதத்தால் உருசிபேதத்தையுடைய அதிகாரிகளை நோக்கி உயர்ந்ததும் இழிந்ததுமான பேதபுருஷார்த் தங்களைக்கலந்து சாஸ்திரம் விதித்தது என்னும் கருத்துத்தோன்ற சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொரு ளென்றார்.

அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாதலான் என்றது சத்துவ ரஜஸ் தமஸென்னும் முக்குணங்களின் ப்ராதாந் யத்தால் மூன்று பிரிவாகிய பிர்ம்ம ருத்திர விஷ்ணுவென்னும் * மூவரையும் சரீரமாகவுடைய முதற்கடவுளோடு ஸம்பந்தமுடை மையான் என்றவாறு. அஃதாவது—அறம்பொருளின்பம் என்னும் மூன்று உறுதிப்பொருள்கட்கும் முதற்கடவுளோடு ‡ சுவஜநககுணா சிரயத்வ ஸம்பந்தமுடைமையால் என்பதாம். முக்குணங்களும் சமவாய ஸம்பந்தத்தால் மூவரிடத்திலுமிருப்பினும் சாமாநாதி கரண்ய ஸம்பந்தத்தால் அக்குணங்கள் முதற்கடவுளிடத்திலுண் டென்பதறிக.

மூவராகிய முதற்கடவுளென்னும் இவ்வாக்கியத்தால் மூவர்க்கு முதற்கடவுளோடு அபேதத்தைக் கூறுவதுபோலத் தோற்றுகிறது. அதுபொருளன்று. ஏனெனின்,—இவ்வாக்கியம் செம்மையாகிய தாமரையென்பதுபோலப் பண்பின்விரியாதலால் பண்புத்தொகை யின் பொருளுணர்ந்தன்றி இவ்வாக்கியத்தின் பொருளினிதுணரப்

---

* சத்துவகுண ப்ராதாந்யமூர்த்தி விஷ்ணுவென்றும், ரஜோகுண ப்ரா தாந்யமூர்த்தி பிர்ம்மாவென்றும், தமோகுண ப்ராதாந்யமூர்த்தி ருத்திர னென்றுங் கொள்க.

‡ சுவபதத்திற்கு உறுதிப்பொருள்களையும், ஜநககுணபதங்கட்கு அவற் றிற்குக் காரணங்களாகிய சத்துவ ரஜஸ் தமோகுணங்களையும், ஆசிரயபதத் திற்கு அக்குணங்கட்கு இடமாகிய முதற்கடவுளையும் பொருளாகக் கொள்க.

படாமையின் இவ்விடத்தில் பண்புத்தொகையின் பொருளாராயப் படுகிறது :—

செந்தாமரை என்பதில் செம்மை குணமாயும், தாமரை திரவியமாயுமிருப்பதால் செம்மையாகிய தாமரையென்று அபேதப் பொருள்கொள்வது அநுசிதமாம். ஏனெனின்,—குணத்திற்கும், திரவியத்திற்கும் அபேதம் எங்ஙனம் கூடும்? இதுபற்றியே நையாயிகர் செந்தாமரை யென்பதற்குச் செம்மையுடையதின் அபேதம் தாமரையென்று சாப்தபோதங்கூறி, செம்மைக்குச் செம்மையுடையதில் நிரூடலக்ஷணையென்பர்.

"வண்ணத்தின் வடிவின" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர், "குணச்சொல் குணமுடையதனை யுணர்த்தலான் ஒன்றனையொன்று விசேடித்து இருசொல்லும் ஒரு பொருளின்மேல் வரும் இயல்பினையுடைய எல்லாச் சொல்லும் பண்புத்தொகையாம்" என்று பொருள்கூறி, "கரிய குதிரை, கரிதாகிய குதிரை, கரியது குதிரை" என்று உதாரணமுங் கூறியுள்ளார்.

கரியது குதிரை என்று பண்பின் சொல்லைப் பண்பியின் சொல்லாய விரித்திருப்பதால் இவர் கொள்கையும், நையாயிகர் கொள்கையோடு விரோதமின்றென்பதறிக.

ஆனால் 'பின்றொக்கவழிக் குணச்சொல் குணமுடையதனை யுணர்த்தலான்' என்று கூறியதால் குதிரையின் கருமையென்று பின்றொகாமல் விசேடியமாய் வருமிடத்துக் குணச்சொல்லிற்குக் குணத்திலே சக்தியுண்டென்பதும், ஈறுதொக்கு விசேடணமாய் வருமிடத்துக் குணச்சொற்குக் குணியிடத்தில் சக்தியுண்டென்பதும் இவருடைய தாற்பரியம்.

குணச்சொற்குக் குணியிடத்தில் சக்தி, லக்ஷணை என்னும் அம்சங்களில் இவருக்கு நையாயிகரோடு மாறுபாடிருப்பினும், குணச்சொல் விசேடணமாய் வருமிடத்தில் குணியையே உணர்த்துமென்பதில் மாறுபாடின்றென்பதறிக. குணச்சொற்குக் குணி

யிடத்தில் சக்தி அல்லது லக்ஷணையை அங்கீகரிப்பதின் குண தோஷங்களைத் தர்க்க நூல்களிற் காண்க.

இனி, வேதாந்த ப்ரக்ரியை யுணர்ந்தோர் கருங்குதிரை என்பதைச் சாமாநாதிகரண்ய வாக்கிய மென்பர். அஃதாவது.— கருமைப்பண்பிற்கு எது அதிகரணமோ, அதுவே குதிரைத் தன்மை தர்மத்திற்கும் அதிகரணமாமென்பதாம். ஒரு பொருளையே பலபடியாகக்காட்டும் இரண்டு முதலிய சொற்களின் கூட்டத்தைச் சாமாநாதிகரண்யமென்பர். செந்தாமரை என்பதில் ஒரே தர்மியைச் செம்மையுடையதாகவும், தாமரைத்தன்மை தர்மமுடையதாகவும் இருசொல்லும் இரண்டு பிரகாரமாக ஒரு பொருளைக் குறிப்பிடுவதாலறிக.

இந்தச் சாமாநாதிகரண்யம் குணகுணிகட்கும், சரீரசரீரிகட்கும், ஆதார ஆதேயங்கட்கும், நியாம்ய நியாமகங்கட்கும் இன்னும் இவைபோல்வன பிறவற்றிற்குமுண்டு. இப்பக்ஷத்திலும் விசேடணமாய் வரும் குணபதம் குணியின் போதத்திற்கே ஏதுவாகின்றது.

இவ்வாறு குணபதம் குணியின் போதத்திற்கு ஏதுவாம் போது அப்பதத்தின்கண் அபரியவஸாநவிர்த்தியையும், விசேடியமாய் குணத்தின் போதத்திற்கேதுவாம்போது அப்பதத்தின்கண் பர்யவஸாநவிர்த்தியையும் அங்கீகரிக்கின்றனர். பதத்திற்கும், அர்த்தத்திற்குமுள்ள ஸம்பந்தத்தினை விர்த்தியென்பர். இதனால் குணபதம் பர்யவஸாநவிர்த்தியினால் தன் போதத்தையும், அபரியவஸாநவிர்த்தியினால் தனது விசேடியத்தின் போதத்தையும் உண்டாக்குகின்றதென்பது பெறப்படும்.

இதுவரை குணகுணிகட்கு அபேதம் ஏற்படாமையால் குணபதத்திற்குக் குணியிடத்திற் சக்தி அல்லது லக்ஷணைகளைப் பலரும் அங்கீகரிக்கின்றனரென்பதும், இதுவிஷயத்தில் விவாதமின்லையென்பது முரைக்கப்பட்டன.

இனி, பிரித்து நிலையில்லாத குணத்திற்கே தனது ஆசிரயத்தோடு அபேதம் ஏற்படாதென்றால், வெவ்வேறான பல தர்மிகட்கு

ஒரு தர்மியோடு அபேதம் எவ்வாற்றானும் பொருந்தாதென்பது சொல்லாமலே பெறப்படும்.

ஆதலால், மூவராகிய முதற்கடவுள் என்பதற்கு மூவரையும் சரீரமாகவுடைய முதற்கடவுள் என்று பொருள் கூறப்பட்டது. இது, சரீரசரீரிபாவ சாமாநாதிகரண்யம். எங்ஙனம் தேவதத்த சப்தமானது தேவதத்த சரீர விசிஷ்டாத்மாவைக் காட்டுகின்றதோ அங்ஙனமே ருத்திர சப்தமும் அபரியவஸாநவிர்த்தியால் ருத்திர சரீர விசிஷ்டாத்மாவைச் சரீரமாகவுடைய பரமாத்மாவைக் காட்டுகிறது. பிர்ம்ம சப்தத்திற்கும் இவ்வாறே பொருள்கொள்க. முக்கிய விசேஷ்யத்தின் போதத்திற்கு ஏதுவாகிய பதப்பொருளின் சம்பந்தத்தினையே அபரியவஸாநவிர்த்தியென்று முன்னுரைக்கப்பட்டது.

"முனியேநான்முகனே முக்கண்ணப்பா" என்று ஆழ்வார் அருளிச்செய்ததும் இதுபற்றி யென்க. ஆழ்வார் பிரம்மருத்திரர்களையே அருளிச்செய்கின்றாரெனிற்படும் இழுக்கென்னை யெனின், பரத்வத்தைப்பற்றிப் பேசுகின்ற "ஒன்றுந்தேவும்" முதலிய பாசுரங்களோடு விரோதப்படுதலின் மாறுக்கொளக்கூறல் என்னும் குற்ற முண்டாமாதலால் பொருந்ாதென்க.

பிர்ம்மருத்திர விஷ்ணுவென்னும் மூவரையும் சரீரமாகவுடைய முதற்கடவுளெனப் பொதுப்படக்கூறினும் நாராயணனாகிய விஷ்ணுவே முதற்கடவுளாதலால் பிர்ம்மருத்திரர்களைச் சரீரமாக வுடைய விஷ்ணுவாகிய முதற்கடவுளென்பது பொருளாகக் கொள்க. தெய்வப்புலமைத் திருவள்ளுவருக்கும் இதுவே கருத்தாமென்பது பின்னர் நிரூபிக்கப்பெறும்.

இராகவராமாநுஜ தாஸர்,
மதுரை.

(தொடரும்).

ஸ்ரீ:

சததனு உபாக்கியானம்.

இந்த உபாக்கியானம் பராசரபகவான் மைத்திரேயரை நோக்கிக் கூறியது. அது வருமாறு:—

முற்காலத்தில் சததனு என்ற சிறந்த ஓர் அரசனிருந்தான். இவன் தருமத்தினின்றும் வழுவாத செங்கோன் மன்னன். இவனுடைய மனைவி சய்பபியை யென்பாள். இவள் கற்பிற்சிறந்தவள்; அழகிலும் மிகுந்தவள். இத்தகைய மனைவியுடன்கூடி இவ்வரசன் ஜபம் ஓமம் தானம் உபவாசம் முதலியவைகளினால் தேவாதிதேவனாகிய ஸ்ரீமந்நாராயணனை ஆராதித்து வந்தான். இங்ஙனம் ஆராதித்து வருகிறகாலத்தில் இவ்வரசனும் மனைவியும் கார்த்திகை ஏகாதசியில் உபவாசமிருந்து கங்காநதியின் தீர்த்தத்தில் நீராடிக் கரையேறினார்கள்.

அப்பொழுது அங்கு ஒரு * பாஷண்டி எதிர்ப்பட்டான். இராஜபத்தினியானவள் அவனோடு பேசாமற் சென்று அவனைப் பார்த்த தோஷத்திற்காக சூரிய தரிசனஞ்செய்தாள். அரசன் தனக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்த ஆசார்யனுக்கு அந்தப் பாஷண்டி சிநேகிதன் என்பதை முன்னிட்டுச் சிறிதுநேரம் அவனோடு உரையாடிக்கொண்டிருந்தான். பின்னர் அரண்மனை வந்து ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருவாராதனஞ்செய்து பாரணை முடித்தனர்.

பிறகு அவ்வரசனுக்கு வாழ்நாள்முடிய அவன் மரணமடைந்தனன். அவன் மனைவியும் உடன்கட்டையேறினாள். அதன்மேல் உபவாசவிரதகாலத்தில் பாஷண்டியோடுரையாடி சல்லாபஞ்செய்த பாபத்தால் நாயாகப்பிறந்தான். அவன் மனைவியும் காசிராஜனுக்கு அருமைப் புதல்வியாய் மிக்க அழகும் கல்வியறிவும் பூர்வ ஜன்ம ஞானமுமுடையவளாய்ப் பிறந்தாள். அரசனும் அருமையாக

---

* பாஷண்டி—வேத சாஸ்திர வொழுக்கத்தைத் துறந்தவன்.

வளர்த்துவந்தான். அவளுக்கு உரியகாலம் வந்தவுடன் அரசன் கல்யாணஞ்செய்விக்க முயன்றான். அப்பொழுது அந்தப் பெண் எனக்கு இப்பொழுது கல்யாணம் வேண்டியதில்லை என்று தகப்பனுடைய முயற்சியைத் தடுத்தனள்.

அதன்மேல் தன்னுடைய நாயகன் நாயாய்ப் பிறந்திருப்பதைத் தனது ஞானத்தினாலறிந்து விதிசை யென்ற நகரத்திற் சென்று நாயாயிருக்கிற தன் பர்த்தாவைக்கண்டு தினந்தோறும் அன்புடன் நல்ல வுணவுகளைக் கொடுத்துவந்தாள். அந்த நாயானது அவள் கொடுக்கும் உணவுகளையுண்டு மகிழ்ச்சியடைந்து தன் ஜாதிக்கேற்ற அன்பைக்காட்டி பணிவான காரியங்களைச் செய்து வந்தது. அதனைக்கண்ட அவள் மிகவும் நாணமுற்றவளாய் அந்த நாயைக் கும்பிட்டு 'மகாராஜா! நீர் விரததினத்தில் தீர்த்தமாடி வருகிற வழியில் ஒரு பாஷண்டியுடன் பேசினீர்; அந்தப் பாதகத்தினால் மிகவும் கேவலமான நாயாகப் பிறந்து உம்முடைய அடியாளான எனக்குப் பணிவான காரியங்களைச் செய்கிறீர்; இதனை நன்றாக அறிந்துகொள்வீர்' என்று பூர்வ ஜன்மத்தினை நினைப்பூட்டினாள்.

இவ்வாறு இவள் சொன்னதைக்கேட்டு அந்த நாய்ப்பிறப்பினை யடைந்த அரசன் தனக்குள் நெடுநேரம் ஆராய்ந்து பார்த்து முன்னிருந்த நிலைமையும் இப்பொழுதடைந்திருக்கு மியல்பையுங் கண்டு வெறுத்து அவ்வூரைவிட்டு வெளியிற் சென்று மலையின் மீதேறி கீழே விழுந்து மரித்து நரிப்பிறப்பை யடைந்தனன்.

அப்பொழுதும் அந்த ராஜபுத்திரியானவள் தன் ஞான திருஷ்டியினால் தன் கணவனுக்கு நேரிட்ட இரண்டாம் பிறப்பையும் தெரிந்து கோலாஹலமென்ற மலையிற் சென்று நரியுருவடைந்திருக்கிற தன் புருஷனைக்கண்டு 'நாயகா! நீர் நாயுருவையடைந்திருக்கும்போது பாஷண்ட சம்பாஷணத்தினால் நேர்ந்ததைத் தெரிவித்தேன். இப்பொழுதும் அதனை அறிந்துகொள்வீர்' என்றனள்.

இவ்வுரையினைக்கேட்ட அந்த நரியுருவடைந்த வேந்தன் மிகுந்த கவலைகொண்டு இரையெடாமற் பட்டினிகிடந்து உயிர் துறந்து, மனிதசஞ்சாரமில்லாத காட்டில் செந்நாயாகப் பிறந்தான்.

அப்பொழுதும் அந்த ராஜகுமாரியானவள் தன் கணவனுக்கு நேர்ந்த மூன்றாவது ஜன்மத்தையறிந்து அங்குச் சென்று அந்தச் செந்நாயை நோக்கி, 'நீர் செந்நாயன்று; சததனு வென்ற மகா ராஜராகவிருந்தீரன்றே; நாயாய் நரியாய் இவ்வாறானீர்' என்று மூன் ஜன்மங்களை யறிவித்தாள். செந்நாயுருவடைந்த அரசனும் அவ்வுருவைத் தாங்கிக்கொண்டிருப்பதற்கு வெறுப்புற்று உயிர் துறந்து கழுகாய்ப் பிறந்தான். அப்பொழுதும் ராஜகன்னிகை அங்குச்சென்று முன்போலவே அவனது பூர்வ ஜன்மத்தினுடைய நிலையை யறிவித்தாள்.

அவனும் அந்தக் கழுகின் உடலைவிட்டுக் காகமாகப் பிறந்தான். ராஜபுத்திரி அங்குந்தொடர்ந்து அந்தக் காகத்தை நோக்கி, 'எல்லா அரசர்களும் உமக்கு வசப்பட்டுப் * பலிகொடுக்கப்பெற்றிருந்த நீர் இப்பொழுது ‡ பலிபுக்காகப் பிறந்தீரே' என்றனள். இவ்வுரையினைக்கேட்டு பூர்வஜன்மத்தி னியல்பையறிந்து மனம் வருந்தி அவ்வுடலைவிட்டு மயிலாகப் பிறந்தான். பின்னர் அந்த ராஜகன்னிகை அந்த மயிலைப் பிடித்துக் கொணர்ந்து அதற்கு வேண்டிய உணவுப்பொருள்களைக் கொடுத்துப் போற்றிவளர்த்து வந்து தன் பிதாவாகிய காசிராஜன் செய்த அசுவமேதயாகத்தின் அவபிரதஸ்நானத்தில் நீராட்டித் தானும் நீராடி மயிலாகிய அந்த ராஜனுக்கு நாய்ப்பிறப்பு முதலாக மயிற் பிறப்பு முடிவாக நேர்ந்த பிறப்புக்களை நினைப்பித்தாள். அவ்வரசனும் தன்னுடைய ஜனன பரம்பரையை நினைத்து நினைத்துத் துயருற்றுத் தன் சரீரத்தை விட்டு ஜனகமகாராஜாவுக்கு மகனைப் பிறந்தான். இவ்வாறு அவன் ஜனகனுக்கு அருமைப்புதல்வனாக வளர்ந்துவருகின்றபோது அந்த ராஜகன்னிகை தன்னுடைய நாயகன் ராஜகுமாரனாகவிருப்பதைத் தெரிந்து விவாகஞ்செய்யும்படி தன் பிதாவைத் தூண்டினாள். அவ்வரசனும் தன் புதல்விக்குச் சுயம்வரதினத்தை நிச்சயித்து பல வரசர்கட்கும் திருமுகம் விடுத்தனன்.

* பலி—அரசர்க்குக் கொடுக்கும் வரிப்பணம்.

‡ பலிபுக்—வைதிககிரியைகளில் போடும் சோற்றையுண்ணும் காகம்.

பல தேயத்து மன்னர்களும் சுயம்வரமண்டபத்திற் குழுமி ஞர்கள். அப்பொழுது இராஜகன்னிகை தான் கருதிய ஜனக ராஜன் புதல்வனையே வரித்தாள். பின்னர் இவ்விருவரும் சகல போகத்தையும் அநுபவித்துவருகிறகாலத்தில் காலவசத்தால் ஜனக ராஜன் சொர்க்கஞ்சேர்ந்தபின் அந்த விதேயதேசத்திற்கு இவனே அரசனுகிப் பல அரசர்களையும் வென்று திறைபெற்றுப் பலயாகங் களையுஞ்செய்து கீர்த்தியுடையவனுய் விளங்கினன். அதன்மேல் புத்திரப்பேற்றையும் பெற்று ஒரு யுத்தகாலத்தில் செறிதவரூது போர்செய்து உயிரைவிட்டான். அப்பொழுது அவன் மனைவியும் மிகமகிழ்ச்சியுடன் உடன்கட்டையேறினள். பின்பு அவ்விருவரும் இந்திரலோகத்தையுங் கடந்துசென்று எல்லா இஷ்டங்களையும் பெறுதற்குரிய சிறந்த புண்ணிய லோகத்தை யடைந்தார்கள்.

மைத்திரேயரே! இவ்வாறு ஒரு பாஷண்டியின் சம்பாஷணத் தால் உண்டாகிய பாபத்தையும் அசுவமேதயாகத்தின் அவபிருத ஸ்நானத்தாலுண்டாகிய புண்ணியத்தையும் நன்கெடுத்தியம்பி னேன். இதனுல் மகாபாபிகளான பாஷண்டி முதலானவர்களின் உறவும், அவர்களோடுரையாடுதலும் கூடாதென்பது விளங்கும். யாகங்களில் தீக்ஷித்திருப்பவனுக்குப் பாஷண்டியோடுரையாடுதல் சிறிதுங்கூடாது. எவன் வீட்டில் ஒருமாதம் வைதிக கர்மலோப முண்டாகிறதோ அவனைக்கண்டால சூரிய தரிசனம் பண்ண வேண்டுமென்ருல் வேத சம்பந்தத்தை முழுதும் விட்டிருக்கிற பாஷண்ட சம்பந்தத்திற்கு எவ்வளவு பாதகமுண்டென்பது சொல்லவும் வேண்டுமோ?

மேலும் பாஷண்டர்களைச் சிநேகித்து அவர்கள் சோற்றை யுண்பதும், அவர்களைத் தன் வீட்டில் உண்பிப்பதுமாகிய செயல் களைச் செய்யலாகா. வேதத்தை நிந்தித்து வேத விரோதமான காரியங்களைச் செய்பவனது சல்லாபங்களைக் கனவிலும் கருதலா காது. இன்னும் அகிருத்தியத்தைச் செய்பவர்களையும் *பிடால

* பிடாலவிரதன் - பூனை போன்ற வஞ்சனை யொழுக்கமுடையவன். இவன் வெளித்தோற்றத்தில் துறவிபோல் வேஷம் பூண்டு எவருக்குந் தெரி யாமல் பாபகாரியங்களைச் செய்பவன். [பிடாலம் - பூனை.]

விரதத்தினரையும், ‡ சடரையும், † ஹைதுகர்களையும், § பகவிருத்திகரையும் வாயாலும் பூஜிக்கலாகாது.

இங்ஙனம் சொல்லப்பட்ட கூடாவொழுக்கத்தினர்களைப் பார்ப்பதினால் சிராத்தபலன் அழிந்துபோம். வீணாக சடை வளர்ப்பவரும், முண்டிதஞ் செய்துகொள்பவரும் தேவாராதனமில்லாமல் சோற்றை யுண்பவரும், உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுபவரும் பிதுரர் பூஜை மறந்தவர்களும் அயோக்கியரோடுறவாடுகின்றனர்களும் தீக்கதியடைவார்கள்.

சத்துக்களாகிய மேன்மக்களோடு உறவு செய்பவர்கள் சிறந்த பதவியை யடைந்து மகிழ்வடைவார்கள்.

---

‡ சடன் - நேரில் நன்மொழி கூறி மறைவில் தீங்கு செய்பவன்.

† ஹைதுகன் - நல்ல காரியங்களைச் செய்ய முயல்பவர்களின் உள்ளத்தை மாற்றி சந்தேகத்தை விளைவிப்பவன்.

§ பகவிருத்தி - கொக்குபோன்ற செய்கையுடையவன். அவனுவான் ஒன்றுமறியாதவன் போலிருந்து மோசஞ் செய்பவன். [பகம் - கொக்கு.]

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(92-ம் பக்கத் தொடர்ச்சி.)

(46) ஒருவன் பித்தோபஹதனைக் கொண்டு சென்று வைத்தியனைப் பரிஹாரங்கேட்க, அவனும் 'ஒரு மண்டலம் க்ஷீர ஸேவை பண்ணிக்கொண்டுவாரும்' என்று சொல்ல அவனும் கொட்டத்தசலிலே யிருந்து பாற்குடங்கட்கெல்லாம் தெண்ட னிட்டுக்கொண்டிருந்தானாம். இத்கால் தாத்பர்யமென்னெனில்; திருநாமத்தால் என்றது. திருநாமத்தைச் சொல்லிப் பரிஹரியுங் கோளென்றபடி என்றருளிச் செய்வர்.

(47) வண்டரும், சொண்டரும் என்கிறவர்களுக்கு அரைய‌ன் சொன்ன வார்த்தைகளுக்குப் பிள்ளையுறங்காவில்லிதாஸர் பரிஹாரம் பண்ணினபடியை நினைப்பது. அஃதாவது - அகளங்க நாட்டாழ்வான் இவர்களுக்கு அமணன் பாழியில் சிம்ஹத்தைக் காட்டி, 'திருமுற்றம் திருவடி தொழுங்கோள்' என்ன அவர்களும் 'மெய்' என்று திருவடி தொழுது, அது அமணன் பாழி

---

(46) "கவளக்களிறட்டபிரான் திருநாமத்தால், தவளப் பொடிக்கொண்டு நீரிட்டிடுமின் தளியுமே" என்ற விடத்தில் இவ் வரலாறு அரும்பதத்தி லுரைக்கப்பட்டுளது. ஒரு மண்டலம் - நாற்பத்தைந்து நாள். க்ஷீரஸேவை பண்ணுதல் - பாலருந்துதல். கொட்டத் தசல் - பசுத் தொழு. இங்கு வைத்தியன் க்ஷீரஸேவை பண்ணவேண்டும் என்பதன் கருத்துப் பொருளுணராத பித்த ரோகி, பாற்குடங்களைத் தண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தது போலிருக்காமல ஆழ்வாராகிய நாயகிக் குண்டாகிய நோயைக் கண்ணபிரானுடைய நாமத்தைச் சொல்லிப் பரிகரிக்கவேண்டு மென்பது தோழியின் கருத்தாமெனக்கொள்க.

(47) மாயனாகிய எப்பெருமானுடைய அடியாரின் ஸ்ரீபாத ரேணுவைவிட்டு ஆழ்வாராகிய நாயகிக்குண்டாகிய நோயைப் பரி ஹரிக்கவேண்டும் என்று தோழி யுரைக்கிறவிடத்தில் இவ்வரலா

என்றறிந்தவாறே மோஹித்துவிழ, பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம் ஸ்ரீபாததூளியை அவர்களுக்கிட, உணர்ந்தெழுந்திருந்தார்கள்.

திருக்கொட்டாரத்தினருகே கைங்கிரைகட்டிக்கொண்டிருக்கிற நாளிலே ஜீயர் இத்திருவாய்மொழி அருளிச்செய்கிறாராய் இவ்வளவிலே வந்தவாறே "தேர்ப்பாகனுருக்கு" என்று நோவுக்கு நிதானஞ் சொன்னானாகில், அவனையிட்டுப் பரிஹரியாதே "மாயன் தமாடி நீறுகொண்டணிய முயலில்" என்று இத்தைப் பரிஹாரமாகச் சொல்லுவானென்? நோவுக்கு நிதானமொன்றும், பரிஹாரமொன்றுமாயோ விருப்பது என்று நான் கேட்டேன்;

றுரைக்கப்பட்டுளது. வண்டர், சொண்டர் என்ற இவ்விருவரும் சிறந்த வீரர்கள்; மறந்தும் புறந்தொழாமாந்தர்கள். அரையன் - அகளங்கநாட்டாழ்வானாகிய அரசன். அமணன் பாழி - ஜைநதேவாலயம். திருமுற்றம் - எம்பெருமான் உகந்துறையும் கோயில். அகளங்கநாட்டாழ்வான் பரீக்ஷார்த்தமாக ஜைநாலயத்தைக் காட்டித் தொழும்படி செய்தனன். அந்த வண்டர், சொண்டர்களும் அது தேவதாந்தரம் என்றறிந்தவாறே மயங்கி விழுந்தனர். இதனால் ஸ்ரீவைஷ்ணவர்கட்குத் தேவதாந்தரபரிசம் கூடாதென்பதும், அந்தப் பரிசமுண்டானால் அதற்கு ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாதரேணுவே பரிஹாரமாம் என்பதும் பெறப்பட்டன.

திருக்கொட்டாரத்தினருகே கைங்கிரைகட்டிக்கொண்டிருந்த நாளிலே என்றது ஒரு கலக காலத்தில் திருக்கொட்டாரத்தினருகே ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாம் கூடி விசனமுற்றுக்கொண்டிருந்த காலத்திலே என்றவாறு. அப்பொழுது நஞ்சீயர் "தீர்ப்பாரையாமினி" என்ற திருவாய்மொழிக்கு வியாக்யானம் அருளிச்செய்தனர். கலகத்தால் விசனமுற்றுக்கொண்டிருந்த காலமானதால் பல திருவாய்மொழியிருக்கவும் இத்திருவாய்மொழியருளிச்செய்தனர் போலும். இங்ஙன மருளிச்செய்துகொண்டிருக்கிறபோது "மாயன்றமாடி நீறுகொண்டணியமுயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே" என்ற பாசுரம் வந்தபோது நம்பிள்ளை வினவத் தொடங்கினர்:—தோழியானவள் ஆழ்வார்

'மோர்க்குழம்பிழியாதே மோஹித்துக்கிடந்த சமயத்தில் சுக்கிட்டுதிப்பின்பு மோர்க்குழம்பு கொடுத்துப் பரிஹரிப்பாரைப் போலே, "தேர்ப்பாகனூர்க்கு" என்றபோதே அவரைக் கொடுவந்து காட்டப்பெறுமையாலே முற்பட இவ்வழியாலே ஆச்வசிப்பித்துப் பின்னை அவனைக்கொண்டுவந்து காட்டுவதாகக் காணும் என்றருளிச்செய்வார்.

(தொடரும்).

நாயகிக்குத் தேர்ப்பாகனாகிய கண்ணபிரான் விஷயமாக நோயுண்டாயிற்று, என்று நோயின்மூலமறிந்து சொன்னாள். இந்த நோயைப் பரிஹரிக்கவேண்டுமானால் அவனைக் கொண்டே செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் இங்குப் பாகவதர்களின் ஸ்ரீபாத ரேணுவைக்கொண்டு பரிஹரிக்கலாம் என்றுரைப்பது பொருந்தாதாகுமன்றோ! நோய்க்கு மூலம் வேறு பரிஹாரம் வேறாயிருக்குமானால் நோய் அகலுமாறெங்ஙனம்? என்று வினவினர். அதற்கு ஜீயர் விடையளிக்கத் தொடங்கினர்:—

மோர்க்குழம்பு இழியாதே மோஹித்துக்கிடந்த சமயத்தில் என்றது மோர்க்குழம்பும் வாயிலிறங்காது மயங்கிக்கிடந்த காலத்தில் என்றவாறு. சுக்கிட்டுதிப் பின்பு என்றது சுக்கை மென்ற வாய்கொண்டு காதிலூதி மயக்கத்தைத் தெளிவித்தபின்பு என்றவாறு. தேர்ப்பாகனூருக்கு என்றபோதே அவரைக்கொடுவந்து காட்டப்பெறுமையாலே என்றது பார்த்தசாரதியாகிய கண்ணபிரானை விரும்பிக் காணவேண்டும் என்றபோது அவ்வெம்பெருமானை யழைத்துக்கொண்டுவந்து காட்டப்பெறுமையாலே என்றவாறு. மோர்க்குழம்பிற்காக மோஹித்துக்கிடந்தபோது அந்த மயக்கத்தை மற்றோர் வகையால் பரிகரித்து அதனைக் கொடுப்பது போல ஈசுவர விஷயமாக மயக்கமுற்றபோது அதனைப் பாகவத ஸம்பந்தத்தால் முன்னதாக மாற்றி அதன் பிறகு அவனைக்காட்டிக் கொடுப்பது உசிதமாகும் என்ற கருத்தால் இங்கு "மாயன்தமரடி நீறுகொண்டணிய முயலில்" என்றருளிச் செய்தார். ஆதலால் இது பொருத்தமுடையதே என்றனர்.